ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

## இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு II தரம் II உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2016 (2017)

## First Efficiency Bar Examination for Officers in Class II, Grade II of the Sri Lanka Surveyors' Service - 2016 (2017)

### (01) திணைக்கள நில அளவைப்பிரமாணங்களும் நிலையியற் கட்டளைகளும்
### Departmental Survey Regulations and Standing Orders

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** (i) எச்சந்தர்ப்பங்களில் அரச களஞ்சியங்களுக்கு பொறுப்பாகவுள்ள ஒரு நில அளவையாளர் தன்னிடமுள்ள அரச களஞ்சியங்களை மீள ஒப்படைத்தல் வேண்டும்? *(08 புள்ளிகள்)*

(ii) அரச களஞ்சியங்கள் யாரிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்? *(03 புள்ளிகள்)*

(iii) அலுவலர் ஒருவரது சேவை திடீரென முடிவுக்கு வரும் போது அவரிடமுள்ள அரச களஞ்சியங்களை ஒப்படைப்பதற்கு ஆகக்கூடியது எத்தனை நாட்கள் அனுமதிக்கப்படுகின்றது? *(03 புள்ளிகள்)*

(iv) ஒரு அலுவலர் வேண்டுமென்றே அரச களஞ்சியங்களை பாரம் கொடுப்பதிலிருந்து விலகி இருப்பாரானால் அவரது நேரடியான மேற்பார்வையாளரினால் எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? *(03 புள்ளிகள்)*

(v) களஞ்சியங்களை மீள ஒப்படைத்த பின்னர், நில அளவையாளருக்கு வழங்கப்படும் சான்றிதழ் என்ன? *(03 புள்ளிகள்)*

**2.** பின்வரும் வேலை வகைகளுக்கு **ஆகக் குறைந்த** நாளாந்த வேலை அளவுகள் என்ன?

(i) விபரமான நில அளவை

(அ) கோணமானி மற்றும் உருக்கு நாடாவை பயன்படுத்தி அளவை செய்கையில் *(02 புள்ளிகள்)*

(ஆ) பூரணமானியைப் பயன்படுத்தி அளவை செய்கையில் *(02 புள்ளிகள்)*

(ii) விபரமான மட்டமாக்கல்

(அ) பொறியியலாளர் மட்டமானியை பயன்படுத்தி அளவை செய்கையில் *(02 புள்ளிகள்)*

(iii) வரைபட மீளாய்வு

(அ) 1 : 50,000 – *(02 புள்ளிகள்)*

(ஆ) 1 : 10,000 – *(02 புள்ளிகள்)*

(iv) கட்டுப்பாட்டுப் போகு

(அ) கோணமானி மற்றும் உருக்கு நாடாவைப் பயன்படுத்தி அளவை செய்கையில் *(02 புள்ளிகள்)*

(ஆ) பூரணமானியைப் பயன்படுத்தி அளவை செய்கையில் *(02 புள்ளிகள்)*

(v) வரைபடம் தயாரித்தல்

(அ) கணனியைப் பயன்படுத்தி *(02 புள்ளிகள்)*

(vi) பரப்புக் கணிப்பீடு

(அ) கணனியைப் பயன்படுத்தி *(02 புள்ளிகள்)*

(vii) காணி விபரப் பட்டியல் தயாரித்தல்

(அ) கணனியைப் பயன்படுத்தி *(02 புள்ளிகள்)*

**3.** (i) GNSS என்ற சுருக்கத்தின் வரைவிலக்கணம் என்ன? (02 *புள்ளிகள்*)

(ii) ஒரு GNSS பாலனப் புள்ளியினை ஸ்தாபிப்பதற்கு கவனத்திற் கொள்ளவேண்டிய **நான்கு** பொதுவிதிகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) ஒரு மூன்றாம் வகை (type C) GNSS பாலனப் புள்ளியினை ஸ்தாபிக்கின்ற போது, பின்வருவனவற்றிற்கான கட்டுமான அளவுகளை (specification) விபரிக்குக.

(அ) செம்மை

(ஆ) அவதானிப்பு முறை

(இ) ஆகக்குறைந்த கால நீட்சி அவதானிப்பு

(ஈ) ஆகக் குறைந்த முதன்மை நிலையங்கள்

(உ) சரிப்படுத்தல் (Adjustment)

(ஊ) நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் (பிரதான நிலையங்களுக்கிடையில்)

(எ) நிலையங்களுக்கு இடைப்பட்ட தூரம் (பிரதான நிலையத்துடன் தொடர்புடைய மூன்று தொடர்ச்சியான நிலையங்களுக்கு இடையில்)

*(12 புள்ளிகள்)*

(iv) ஒரு நில அளவையாளருக்கு GNSS புள்ளிகளானது மிகவும் தேவை வாய்ந்தது, ஏன் என்பதை விபரிக்குக. (02 *புள்ளிகள்*)

**4.** (i) காணி சுவீகரிப்பு கட்டளைச் சட்டத்தின் நோக்கம் என்ன? *(04 புள்ளிகள்)*

(ii) நில அளவை தொடர்பாக காணி சுவீகரிப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவு இலக்கங்கள் என்ன? *(02 புள்ளிகள்)*

(iii) காணி சுவீகரிப்பு கட்டளைச் சட்டத்தின்படி, ஒரு காணியினை சுவீகரிப்பதற்கு, யாரினால் வர்த்தகமானி அறிவித்தல் வழங்கப்படும்? *(02 புள்ளிகள்)*

(iv) உத்தேசிக்கப்பட்ட காணியினை சுவீகரிப்பதற்காக ஒரு முன்னோடிச் சுவடு வரைபடம் தயாரிப்பதற்கு மாவட்டத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகருக்கு யாரினால் "அளவை வேண்டுகோள்" வழங்கப்படுகின்றது? *(02 புள்ளிகள்)*

(v) ஒரு முன்னோடிச் சுவடு வரைபடத்தில் சேர்க்கப்படும் பிரதான விபரங்கள் என்ன? *(10 புள்ளிகள்)*

**5.** ஒரு அளவையின் அனுமதிக்கத்தக்க வழுவினை கணிப்பதற்கு $\sqrt{Area} \times \sigma_d \times \sqrt{2}$ எனும் சமன்பாடு பயன்படுத்தப்படுகின்றது. இங்கு $\sigma_d$ காணித்துண்டுகளின் எல்லைகளது சகல விபரப்புள்ளிகளினதும், கிடையான நிலைய நிச்சயமற்ற தன்மை ஆகும்.

(i) மேற்குறிப்பிடப்பட்ட சமன்பாட்டில், *Area*, $\sigma_d$ மற்றும் அனுமதிக்கத்தக்க வழு போன்றவற்றின் அலகுகள் என்ன? *(04 புள்ளிகள்)*

(ii) நிலையான எல்லை மற்றும் பொது எல்லை என்பவற்றை வரையறுக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) பின்வரும் செம்மை மட்டங்களுக்கு $\sigma_d$ இன் பெறுமதியை குறிப்பிடுக.

(அ) வகுப்பு I செம்மை மட்டம்

(ஆ) வகுப்பு II செம்மை மட்டம்

(இ) வகுப்பு III செம்மை மட்டம்

*(06 புள்ளிகள்)*

(iv) 1 ஹெக்ரெயர் காணித் துண்டிற்கான அனுமதிக்கத்தக்க வழுவினை வகுப்பு I மற்றும் வகுப்பு II செம்மை மட்டத்திற்காக சதுர மீற்றரில் கணிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு II தரம் II உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2016 (2017)**

First Efficiency Bar Examination for Officers in Class II, Grade II of the Sri Lanka Surveyors' Service - 2016 (2017)

**(02) நிதிப்பிரமாணங்கள், கேள்விப்பத்திர நடைமுறைகள், தாபனக்கோவை**

Financial Regulations, Tender Procedure and Establishments Code

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**முதலாவது** வினாவுக்கும் மேலும் **இரு** வினாக்கள் உட்பட மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

**1.** (i) விரிவான ஆளணி அட்டவணையில் உள்ளடக்கப்படவேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) பாதீட்டு (வரவு செலவுத் திட்ட) வகைப்படுத்தல் அலகுகள் **நான்கை** பெயரிடுக.

(iii) முற்பண கணக்குகளில் **நான்கு** வகைகளைக் குறிப்பிடுக.

(iv) அரசாங்க ஆளணி தொடர்பாக நி.பி. 71ன் பிரகாரம் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் அனுமதி பெறப்படவேண்டிய **நான்கு** விடயங்களைப் பெயரிடுக.

(v) திரட்டு நிதியிலிருந்து நிதியை செலவழிப்பதற்கு வழங்கப்படுகின்ற ஆணைச்சீட்டு வகைகள் **நான்கை** பெயரிடுக.

(vi) நி.பி. 135 இன் கீழ் செலவு தொடர்பாக அதிகாரங்களைப் பகிர்வதில் உள்ள **நான்கு** நிலைகளைக் குறிப்பிடுக.

(vii) ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்படவேண்டிய **நான்கு** விடயங்களை சுட்டிக் காட்டுக.

(viii) ஒரு அரச அலுவலருக்கு வேதன ஏற்றம் வழங்கமுடியாத சந்தர்ப்பங்களின் நிலைகள் **நான்கை** பெயரிடுக.

(ix) ஒரு அரச காரியாலயத்தில் **அழித்தொழிக்ககூடாத** ஆவணங்கள் **நான்கை** குறிப்பிடுக.

(x) அமைச்சரவையின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் **நான்கு** வகையான அலுவலர்களைப் பெயரிடுக.

(xi) அரச அலுவலர் ஒருவருக்கு வழங்கப்படும் குற்றப்பத்திரத்தில் உள்ளடக்கப்படும் **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

(xii) பதில் கடமைச் சம்பளம் வழங்கப்படும் **நான்கு** நியமன வகைகளைப் பெயரிடுக.

(xiii) பொருள் கொள்ளல் செய்முறை ஒன்றின் போது (procurement process) உத்தரவாதம் அளிக்கப்படும் **நான்கு** குறிக்கோள்களைப் பெயரிடுக.

(xiv) ஒரு வேலையொன்றை தனது தொழிலாளர்களையும் உபகரணங்களையும் மட்டும் பாவித்து செய்யவேண்டிய **நான்கு** சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.

(xv) கேள்விப்பத்திர திறத்தலின்போது கேள்விப்பத்திர திறத்தல் குழுவினால் பங்குபற்றுவோருக்கு வாசித்துக் காட்டவேண்டிய **நான்கு** விடயங்களைப் பெயரிடுக.

(xvi) ஒரு கேள்விப்பத்திர சிறுவிலகல் (minor deviation) எனக் கருதப்படும் **நான்கு** விடயங்களைப் பெயரிடுக.

(xvii) கேள்விப்பத்திர மதிப்பீட்டு செய்முறை (bid evaluation process) யின்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களைப் பெயரிடுக.

(xviii) பொருள் வழங்குநர் ஒருவரிடமிருந்து பண்டமொன்று பெறப்பட்ட பின்னர் வழங்கப்படும் சான்றிதழில் அடங்கவேண்டிய விடயங்கள் **நான்கை** பெயரிடுக.

[பக் 2 ஐப் பார்க்க

**2.** (i) வீரமன் நடைமுறை **பொருத்தமற்றதாகும்** சந்தர்ப்பங்கள் **ஐந்தைப்** பெயரிடுக.

(ii) நி.பி. 102 (1) ன்படி நட்டங்களில் அடங்கும் உருப்படிகள் **ஐந்தை** குறிப்பிடுக.

(iii) காசோலை மூலம் பணம் செலுத்தப்படும்போது கருத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் **நான்கை** குறிப்பிடுக.

**3.** (i) அரச உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்பட்ட **நான்கு** தொழிற்பாடுகளை பெயரிடுக.

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிப்புக்காகத் தகவுரை வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களால் வழங்கப்படக்கூடிய நியமனங்களின் **ஐந்து** வகைகளைப் பெயரிடுக.

(iii) புதிதாக அரச நியமனம் பெற்ற உத்தியோகத்தரது பெயர்வழிக் கோவையில் (personal file) உள்ளடக்கப்படும் **ஐந்து** வகையான ஆவணங்களை பெயரிடுக.

**4.** (i) பொருள் கொள்ளல் நன்னடத்தை (procurement ethics) யின் கீழ்வரும் **ஐந்து** விடயங்களை குறிப்பிடுக.

(ii) பொருள் கொள்ளல் உரிமத்தின் (procurement entity) பொறுப்புக்களில் அடங்கும் **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக.

(iii) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் (TEC) பொறுப்புக்கள் **நான்கை** குறிப்பிடுக.

**5.** ஏதாவது **நான்கு** விடயங்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) பொருள் கொள்ளல் குழுவின் பொறுப்பு

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அடக்கம் (composition)

(iii) திரட்டுநிதியம்

(iv) அரச கணக்கு குழு (COPA)

(v) நியமனக் கடிதத்தில் நிபந்தனைகள்

(vi) தகுதிகாண் காலம் (தகுதிகூர் காலம்)

* * *